17th December 1959]

விஷயம். இரண்டாவது ஆர்.டி.ஓ. பெனல்ட்டி போடுகிருர்கள். சாகுபடி செய்யக்கூடாது என்று சொல்லும்போது தொடர்ந்து செய்தால் ஒரு தடவைக்கு பிறகு, இரண்டாவது, மூன்ருவது நான்காவது தடவை என்று தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் பெனல்ட்டி அதிகமாக இருக்கும். அதனுல்தான் டிஸ்பாரிட்டி இருக்கிறது—அது ஒரு காரணம். பிற்பாடு இந்தத் தொந்தரவுக்கே காரணம், அரசாங்கம் முன்கூட்டியே பிரசுரம் செய்கிறது, அதாவது இந்த வருஷம் 10,000 அல்லது 20,000 ஏக்கருக்கு அட்வான்ஸ் காருக்கு தண்ணீர் கொடுக்க முடியும். அதற்குமேல் சாகுபடி செய்தால் தண்டத் தீர்வை போடப்படும் என்று பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது. அளவுக்குமேல் மீறி பயிர் செய்கிருர்கள். அதைத் தடுக்க அரசாங்கம் பெனல்ட்டி போடுகிறது. அதை ஏன் தடுக்கவேண்டுமென்று சொன்னுல், இதிலே முதல் பிரையாரிட்டி ஆயக்கட்டுக்குத்தான் அளிக்கவேண்டும். முதலில் அவர்களுக்கு இரண்டு போகத்திற்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும் அதற்காகத்தான் இதை அனுஷ்டித்து வருகிறோம். இதையெல்லாம் கவனித்து இதை எப்படி தவிர்க்கலாம் என்பதற்காக கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கனம் மராமத்து அமைச்சர் அவர்களும் நானும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்பு இதை நேரிலேயே கண்டு வந்தோம். இன்னும் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்குள் அதிகாரிகளைக் கொண்டு இதற்கு ஒரு தக்க முடிவு கட்டப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவர் அவர்களே, ஆர்.டி.ஓ.-க்களுக்குப் "பவர்" கொடுக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விதமாகப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னுர்கள். திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய தாலுகாக்களில் 10 ரேட் போட்டிருக்கும்போது திருநெல்வேலியில் ஆர்.டி.ஓ. 20 ரேட் போட்டு 250 ரூபாய் வசூலிக்கிருர்கள் என்பது தெரியுமா? அந்த விஷயத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் முக்கியமாகக் கவனிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைத்தான் நான் விளக்கமாக எடுத்துச் சொன்னேன். அதை அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லையோ? அல்லது நான்தான் சரியாக எடுத்துச் சொல்லவில்லையோ? கூடாது என்று சொல்லியும் தொடர்ந்து செய்தால் பெனல்டி அதிகமாகிறது. முதல் தடவை 10 ரூபாய் என்ருல் இரண்டாவது தடவை 20 ரூபாய், மூன்ருவது தடவை 30 ரூபாய் என்று அதிகமாகிக்கொண்டு போகிறது. ஒரு லிமிட் இருக்கிறது. அதுவரை போகிறது. அதனுல்தான் இந்த வித்தியாசம்.

Community Development Blocks in the Thanjavur district

* 226 Q.—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when the Community Development Block, Pattukkottai, Tanjore district, was started;

(b) whether there is any proposal to include Sethubavachatram Block to be started in 1959–60;

(c) whether the Government are aware of the priority list of Blocks for Thanjavur district approved by the Thanjavur District Planning Board; and

(d) how many new Blocks are proposed to be started in the Thanjavur district in 1959–60 and what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) 2nd October 1956.

(b) The Sethubavachatram Block has since been taken up as a Pre-extension Block with effect from 1st October 1959.

(c) Yes, Sir.

(d) During the year 1959–60, two Blocks were allotted to the Thanjavur district, viz., Budalur and Sethubavachatram.

Fertilisers

*227 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. U. SHANMUGAM): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1958-59, 1959-60-ம் ஆண்டுகளுக்காக மத்திய சர்க்காரிடம் நம் மாகாண சர்க்கார் கோரிய இரசாயன உர அளவு எவ்வளவு?

(ஆ) கிடைத்த அளவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) and (b) a paper[a] is placed on the Table of the house.

SRI S. M. ANNAMALAI: ஸார், மேஜைமேல் வைக்கப் பட்டுள்ள அறிக்கையில் 1959-60-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்காரைக் கேட்டது 2,93,400 டன்; ஆனால் அவர்கள் கொடுத்தது 76,757 டன், என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு மத்திய சர்க் கார் 4-ல் ஒரு பங்குதான் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் மேலும் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இன்னும் அதிகமான இரசாயன உரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது நாம் கேட்பதிலே பாதி கிடைக்கிறது. எல்லா ராஜ்யங்களுக்கும் பாதி தான் அவர்களால் சப்ளை செய்ய முடிகிறது. இந்த ராஜ்யத் துக்கும் பாதிக்குக் குறையாமல் வருகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் வருஷம் பூராவுக்கும் உள்ள புள்ளி விவரங்கள் அல்ல. இன்னும் வரவேண்டியிருக்கிறது.

SRI S. LAZAR: ஜில்லா வாரியாக ஒதுக்கப்பட்ட கோட்டா கூட அந்தந்த ஜில்லாக்களுக்குத் தக்க காலத்தில் வந்து சேருவ தில்லை என்ற புகார் வந்திருக்கிறதா? தக்க காலத்தில் சேர்ப்பதற் கான நடவடிக்கையைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா?

---

[a] Printed as Appendix I on page 568 infra.